நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை
807, அண்ணா சாலை, சென்னை – 600 002.

முன்னிலை: திரு.பங்கஜ் குமார் பன்சல், இ.ஆ.ப.

ந.க.எண்.9862/10பிஎ1 நாள்: 17.02.2011

பொருள்: நகர் ஊரமைப்பு – உள்ளாட்சிகளுக்கு திட்ட அனுமதி வழங்க கூடுதல் அதிகாரம் வழங்கப்பட்டது – தெளிவுரை (Clarification ) வழங்குதல் – சம்பந்தமாக.

படிக்க: 1) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.9862/10பிஏ1, நாள்: 14.06.10.
2) இவ்வலுவலக செயல்முறை ஆணை எண்.9862/10 பிஏ1, நாள் 30.12.10.

------

உத்தரவு:

பார்வையில் சுட்டிய நகர் ஊரமைப்பு இயக்குநர் அவர்கள் உத்தரவில் உள்ளூர் திட்டக் குழுமம் மற்றும் புதுநகர் வளர்ச்சி குழுமம் கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து உள்ளாட்சிகளுக்கும் நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49ன் கீழ் திட்ட அனுமதி வழங்கவும், தொழில்நுட்ப அனுமதியும் (Technical Clearance) வழங்கவும் கீழ்க்கண்டவாறு அதிகார பகிர்வு வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | கட்டிடப் பயன்பாடு | மொத்த தளங்கள் | குடியிருப்பு எண்ணிக்கை | மொத்த தளப்பரப்பு | கட்டிட வகைப்பாடு |
|---|---|---|---|---|---|
| 1 | குடியிருப்பு | தரை தளம் + முதல் தளம் | நான்கு | 4000 சதுர அடி | தனித்த கட்டிடம் |
| 2 | வணிக கட்டிடம் | தரை தளம் + முதல் தளம் | – | 2000 சதுர அடி | தனித்த கட்டிடம் |

மேற்படி அதிகார பகிர்வு சம்பந்தமாக கீழ்க்காணும் தெளிவுரைகள் (Clarifications) வழங்கப்படுகின்றன.

1) வாகன நிறுத்துமிடத்திற்காக கொடுக்கப்படும் ஸ்டில்ட் தளம் பரப்பளவும் சேர்த்தே (Area included for Stilt floor parking) குடியிருப்பு உபயோகத்திற்கு 4000 சதுர அடி வரையும் வணிக உபயோகத்திற்கு 2000 சதுர அடி வரையும் அதிகாரம் பகிர்வு வழங்கப்படுகிறது.
2) புதிய விரிவு அபிவிருத்தி திட்ட விதி
8(viii) – ஒரு குடியிருப்புக்கு மேல்
15(i) – மனை உட்பிரிவு / ஒருங்கிணைப்பு/ ஒப்புதல்

3) மனைப்பிரிவு விதி (5) – ஒரு குடியிருப்புக்கு மேல், அதிகார வரம்பிற்குள் திட்ட அனுமதி வழங்கப்படும் உத்தேசங்களுக்கு மேற்காண் விதிகளை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி தளர்த்துவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது.

4) தமிழ்நாடு நகராட்சி கட்டிட விதி 6(1) நிறைவு செய்யும் வகையில் மனை உட்பிரிவு அனுமதி வழங்க அதிகாரம் வழங்கப்படுகிறது (ம.பி. நிபந்தனை எண்.3ஐ தளர்த்தி).

5) மனையிடத்தில் அமையும் நிலையில் உள்ள கட்டிடங்கள் மற்றும் உத்தேச கட்டிடங்களுக்கு மேற்படி அதிகார பகிர்வுக்கு உட்பட்டு அனுமதி வழங்க அதிகாரம் வழங்கப்படுகிறது.

மேற்படி சுற்றறிக்கை பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகைச் சான்று வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

(ஒம்) பங்கஜ் குமார் பன்சல்,
நகர் ஊரமைப்பு இயக்குநர்.

பெறுநர்:

1) அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
2) அனைத்து உறுப்பினர் செயலர்கள்,
அனைத்து கூட்டு உள்ளூர் திட்டக் குழுமங்கள் / புதுநகர் வளர்ச்சிக் குழுமங்கள்
3) அனைத்து மண்டல துணை இயக்குநர்கள்
4) அனைத்து மாநகராட்சி (சென்னை நீங்கலாக) ஆணையர்கள்,
5) இணை இயக்குநர், உதவி இயக்குநர்கள், தலைமை அலுவலகம்,
6) இயக்குநர், ஊராட்சிகள், சென்னை.
7) இயக்குநர், நகராட்சிகள், சென்னை.
8) இயக்குநர், பேருராட்சிகள், சென்னை.

(6–8) மேல்நடவடிக்கை தொடரும் பொருட்டு.

நகல் சமர்ப்பிக்கப்படுகிறது:

1) அரசு செயலர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சென்னை–9.
2) அரசு செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, சென்னை-9

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

(ஒம்).....
கண்காணிப்பாளர்